# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 251/மா/2025
நாள் 30.03.2026

R. சிட்டிபாபு
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 2,
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 060, மாதவரம், மஞ்சம்பாக்கம், காமராஜர் சாலை, 8வது தெரு (அருகில்), கதவு எண் 4/186 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. சிட்டிபாபு என்பவரின் 17.06.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.06.2025 அன்று பெறப்பட்டு 251/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 060, மாதவரம், மஞ்சம்பாக்கம், காமராஜர் சாலை, 8வது தெரு (அருகில்), கதவு எண் 4/186 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. சிட்டிபாபு என்பவர் 17.06.2025 மற்றும் 07.07.2025 நாளிட்ட தனது மனுக்களில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

### மனு நாள் 17.06.2025

“நான் 10.03.2025 அன்று மக்கள் குறை தீர்க்கும் முகாமில் கொடுத்த மனுவில் உதவி வருவாய் அலுவலர் மண்டலம் (2) 21.04.2025 எனக்கு அளித்த பதில் கடிதத்தில் நான் 30.08.2024 மனு பெற்று 31.08.2024 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. எனக்கு அளித்த பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் 30.10.2024 தான் என் பெயர் மாற்றம் செய்யப்பட்டது 26.08.2024 ஆண்டு ஆவணத்தில் உள்ளவாறு எழுதி கொடுத்த மனுவில் பெயர் மாற்றம் SURVEYNUM, DOOR NO. உள்ளபடி செய்யவில்லை என்பதால் தான் 03–11–2018 & 06.011.2018 & 02.12.2024 e.Gov – DCB CHENNAI CORPORTION (WEB SITE) கொடுத்த மனுக்களில் முறையீடு செய்துள்ளேன். மறுபடியும் (GCC-Website) பழைய சர்வே நம்பர் 2B3A1 எவ்வாறு மாறியது. மேலும் யுவராணி என்பவருக்கு வருவாய் ஆவணங்களில் ஏற்பட்ட குளறுபடிகள் SURVEYNUM-2B3A1 மாற்றம் செய்யப்பட்டது. யுவராணி என்பவருக்கு சொந்தமான சொத்துக்கு நான் சொத்து வரி கட்ட முடியுமா? என் சர்வே நம்பர் 103/2B2B-2024 & சர்வே ஆவணங்கள் அடிப்படையிலும் விஏஓ அவர்களின் அறிக்கையின் அடிப்படையிலும் என்னுடைய சொத்துக்கு survey Num-103/2B2B பிழை பத்திரம் மற்றும் பட்டா மாற்றம் நாள்

01.08.2024 பதிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் நான் பெயர் மாற்றம் செய்தேன். ஆனால் நீங்கள் எனக்கு அளித்த பதில் கடித்தில் 30.08.2024 மனு பெற்று 31.08.2024 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக பதில் அளித்துள்ளீர்கள்.

26.08.2024 அன்று மனு கொடுத்த நான் மணலி மண்டலம் (2)–DIV-19-15 தடவைக்கு மேல் என்னை அலைக்கழிக்க வைத்து மன உளைச்சல் கொடுத்த சர்வே நம்பரில் & DOOR NUM & WIFE NAME SPELLING MISTAKE பிழை திருத்தம் ஏற்படுத்தி அதன் பொருட்டு நான் 03-11-24 & 06-11-2024 & 02-12-2024 வரை நான்கு மாதங்கள் என்னை அலைக்கழிக்க வைத்து இல்லாமல் நான் மாவட்ட ஆட்சியர் கொடுத்த மனுவில் குறிப்பிட்ட ரூபாய் 2000/– அரசாணை அளிக்குமாறு கேட்டேன். மேலும் நீங்கள் எனக்கு கொடுத்த பதில் கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 2023 விதி எண் 256/2023 ரூபாய் 2000/– விதிக்கப்பட்டதாக எனக்கு பதில் அளித்துள்ளீர்கள் விதி எண் 256 அதன் நகல் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னிடம் ரூபாய் 2000/– கையூட்டு கேட்ட அலுவலர் என்பவருக்கு மாநகராட்சி என்ன நடவடிக்கை எடுத்து உள்ளீர்கள் என்பதையும் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் நன்னெடுத்த விதி பின்பற்றப்படுகிறதா தாங்கள் ஏன் எனக்கு அளித்த பதில் கடிதத்தில் குறிப்பிடவில்லை."

<u>மனு நாள் 07.07.2025</u>

"நான் 10.03.2025 அன்று மக்கள் குறை தீர்க்கும் முகாமில் கொடுத்த மனுவில் உதவி வருவாய் அலுவலர் மண்டலம் (2) 21.04.2025 எனக்கு அளித்த பதில் கடிதத்தில் நான் 30.08.2024 மனு பெற்று 31.8.2024 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

எனக்கு அளித்த பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் 30.10.2024 தான் என் பெயர் மட்டும் மாற்றம் செய்யப்பட்டது 26.08.2024 ஆண்டு ஆவணத்தில் உள்ளவாறு எழுதி கொடுத்த மனுவில் பெயர் மாற்றம் SURVEYNUM, DOOR NO. உள்ளபடி செய்யவில்லை என்பதால் தான் 03–11–2018 & 06.11.2018 & 02.12.2024 e.Gov – DCB CHENNAI CORPORTION (WEB SITE) verify செய்து நான் கொடுத்த மனுக்களில் முறையீடு செய்துள்ளேன். (Reminder letter) மறுபடியும் (GCC-Website) பழைய சர்வே நம்பர் 2B3A1 எவ்வாறு மாறியது. மேலும் யுவராணி என்பவருக்கு வருவாய் ஆவணங்களில் ஏற்பட்ட குளறுபடிகள் SURVEYNUM-2B3A1 மாற்றம் செய்யப்பட்டது. யுவராணி என்பவருக்கு சொந்தமான சொத்துக்கு நான் சொத்து வரி கட்ட முடியுமா? என் சர்வே நம்பர் 103/2B2B-2024 & சர்வே ஆவணங்கள் அடிப்படையிலும் விஏஓ அவர்களின் அறிக்கைகள் அடிப்படையிலும் என்னுடைய சொத்துக்கு survey Num-103/2B2B பிழை பத்திரம் மற்றும் பட்டா மாற்றம் நாள் 01.08.2024 பதிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் நான் பெயர் மாற்றம் செய்தேன். ஆனால் நீங்கள் எனக்கு அளித்த பதில் கடித்தில் 30.08.2024 மனு பெற்று 31.08.2024 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக பதில் அளித்துள்ளீர்கள்.

26.08.2024 அன்று மனு கொடுத்த நான் மணலி மண்டலம் (2)–DIV-19-15 தடவைக்கு மேல் என்னை அலைக்கழிக்க வைத்து மன உளைச்சல் கொடுத்து சர்வே நம்பரில் & DOOR NUM & WIFE NAME SPELLING MISTAKE பிழை திருத்தம் ஏற்படுத்தி அதன் பொருட்டு நான் 03-11-24 & 06-11-2024 & 02-12-2024 வரை நான்கு மாதங்கள் என்னை அலைக்கழிக்க வைத்து இல்லாமல் நான் மாவட்ட ஆட்சியர் கொடுத்த மனுவில் குறிப்பிட்ட கால தாமதம் கட்டணம் குறித்து ரூபாய் 2000/– அரசாணை அளிக்குமாறு கேட்டேன். மேலும் நீங்கள் எனக்கு கொடுத்த பதில் கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 2023 விதி எண் 256/2023 ரூபாய் 2000/– கால தாமதம்

கட்டணம் விதிக்கப்பட்டதாக எனக்கு பதில் அளித்துள்ளீர்கள் விதி எண் 256 அதன் நகல் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னிடம் ரூபாய் 2000/–கையூட்டு கேட்ட அலுவலர் என்பவருக்கு மாநகராட்சி என்ன நடவடிக்கை எடுத்து உள்ளீர்கள் என்பதையும் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் நன்னெடுத்த விதி பின்பற்றப்படுகிறதா தாங்கள் ஏன் எனக்கு அளித்த பதில் கடிதத்தில் குறிப்பிடவில்லை. நான் என்னுடைய ஆவணங்களை சமர்ப்பிக்கிறேன் இதை நன்கு விசாரித்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்து எனக்கு நல்ல தீர்வை பெற்று தரும்படி உங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்"

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 18.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2 மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2 மண்டல அலுவலர் தனது 11.08.2025 மற்றும் 10.02.2026 நாளிட்ட கடிதங்களில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில்–

"புகார் மனு குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களுக்கு சமர்ப்பிப்பது யாதெனில் மனுதாரர் அவர்கள் 26.08.2024 அன்று சொத்துவரியில் பெயர் மாற்றம் கோரி விண்ணப்பம் அளித்திருந்தார். மனுதாரரின் விண்ணப்பமானது வருவாய்த்துறை அலுவலகத்தில் 30.08.2024 அன்று பெறப்பட்டு 31.08.2024 அன்றே பெயர் மாற்றம் செய்யப்பட்டு விட்டது. மேலும் மனுதாரர் 26.08.2024 அளித்த கடிதத்தில் தன்னுடைய மனுவில் பழைய சொத்து உரிமையாளரின் பெயர்த்திருத்தம், தன்னுடைய விலாசத் திருத்தம் செய்யுமாறு கோரவில்லை. இதுபற்றி மனுதாரருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ERPயில் பெயர் மாற்றமோ, பெயர் திருத்தமோ அல்லது முகவரி திருத்தமோ தனித்தனியாக தான் செய்ய முடியும். ஒரே முறையில் அனைத்தும் செய்ய முடியாது என்று கூறப்பட்டது.

எனவே மனுதாரர் அவர்கள் பெயர்த்திருத்தம், விலாசத்திருத்தம் மற்றும் ரூ.2000/– காலதாமத கட்டணம் குறித்து கடிதம் அளித்துள்ளார். தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 2023–ன்படி பத்திரம் பதிவு செய்யப்பட்டு 3 மாதங்களுக்கு மேற்பட்ட அனைத்து சொத்துவரி பெயர் மாற்ற விண்ணப்பங்களுக்கும் ரூ.2000/– காலதாமத கட்டணமாக விதிக்கப்படுகிறது. மனுதாரர் பட்டா பெயர் மாற்ற செய்யப்பட்டதை வைத்து காலதாமத கட்டணத்தை இரத்து செய்யுமாறு கடிதம் அளித்துள்ளார். ஆனால் சென்னை மாநகராட்சியிலோ பத்திரப்பதிவை அடிப்படையாக வைத்துதான் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. மனுதாரராலேயே பெயர் மாற்றம் விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்டு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் பத்திரம் பதிவு செய்யப்பட்ட தேதி அனைத்தும் அவராலே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதில் அவரது சொத்து பதிவு செய்யப்பட்டு 3 மாதங்களுக்கு மேலாகி விட்டதால் பெயர் மாற்றம் செய்யப்படும் போது தானகவே பெருநகர சென்னை மாநகராட்சி ERP மூலமாகவே ரூ.2000 காலதாமத கட்டணமாக விதிக்கப்பட்டு விடும். மண்டல அலுவலக வருவாய்த் துறையில் யாரும் காலதாமத கட்டணத்தை விதிப்பதில்லை என தங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

மேலும் மனுதாரர் கோரிய சர்வே எண் திருத்தம், முகவரி திருத்தம் செய்யப்படும் போது அவர் பத்திரத்தில் பென்சில் கொண்டு எழுதிய திருத்தத்தை செய்யுமாறு கோரியுள்ளதால், அவரது முகவரி திருத்தம் மட்டும் செய்யப்பட்டது. மேலும் மனுதாரர் தொடர்ந்து நேரில் வலியுறுத்தியதால் அவரது சர்வே எண்ணும் திருத்தம் செய்யப்பட்டது. மனுதாரரின் அனைத்து கோரிக்கைகளும் முடித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 2023–ன்படி பெயர் மாற்ற காலதாமத

கட்டணம் விதிக்கப்பட்டதன் காரணமாக பெயர் மாற்றத்திற்கு கையூட்டு கேட்டதாக தவறான புகார் அளித்துள்ளார் என்பதும் தங்களின் கனிவான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 27.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 27.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''2018 ம் ஆண்டு எனது மனைவி C. இந்துமதி பெயரில் இருந்த சொத்தினை எனது பெயரான R. சிட்டிபாபு என்ற பெயரில் மாற்றம் செய்யப்பட்ட சொத்திற்கு எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டதால், எனது மனைவியின் பெயரில் இருந்த சொத்து வரி மற்றும் குடிநீர் வரியினை எனது பெயருக்கு மாற்றம் செய்ய 23.08.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–க்கு மனு கொடுத்தேன்.

ஆனால் 30.10.2024ல் பெயர் மட்டுமே மாற்றம் செய்யப்பட்டது. மற்ற விவரங்களான சர்வே எண். மற்றும் கதவு எண் மாற்றப்படவில்லை. மீண்டும் இது குறித்து கேட்ட போது மேற்படி அலுவலகத்தில் வரிவிதிப்பாளர் அவர்கள் ரூ.2000/– கொடுத்தால், அதனை மாற்றி தருகிறேன் என்று தெரிவித்தார். அதற்கு ரசீது வழங்கப்படுமா என கேட்ட போது மேற்படி பணி முடிக்க வேண்டும் எனில் மேற்படி தொகை வழங்க வேண்டும் என தெரிவித்தார். மேலும் 03.11.2024 மற்றும் 02.12.2024 ஆகிய தேதிகளில் சர்வே எண், உட்பிரிவு எண் மற்றும் கதவு எண் ஆகியவை மாற்றம் செய்யப்படவில்லை என்று மனு அளிக்கப்பட்டது.

ஆனால் பதில் கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 2023 விதி எண் 256–ன்படி ரூபாய் 2000/– அபராதம் விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அந்த விதியின் நகல் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரப்பட்டும் அளிக்கப்படவில்லை. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2ல் கேட்கப்பட்ட செலவினத் தொகை ரூ.2000/– அளிக்காத காரணத்தினால் ரூ 2000/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, முறையாக மனு செய்தும் அபராத தொகையாக ரூ.2000/– விதிக்கப்பட்டதை ரத்து செய்யுமாறும், என்னை அலைக்கழித்த சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–ன் மண்டல அலுவலர் சார்பாக முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோர் 27.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:

''மனுதாரர் அவர்கள் 26.8.2024 அன்று சொத்துவரியில் பெயர் மாற்றம் செய்யக் கோரி விண்ணப்பம் அளித்திருந்தார். மனுதாரரின் விண்ணப்பமானது வருவாய் பிரிவில் 30.8.2024 அன்று பெறப்பட்டு 31.8.2024 அன்றே பெயர் மாற்றம் செய்யப்பட்டு விட்டது. மேலும் மனுதாரர் 26.8.2024 அளித்த கடிதத்தில் தன்னுடைய மனுவில் பழைய சொத்து உரிமையாளரின் பெயர் திருத்தம் தன்னுடைய விலாசத்திருத்தம் செய்யுமாறு கோரவில்லை. இதுபற்றி மனுதாரருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ERP யில் பெயர் மாற்றமோ,

பெயர் திருத்தமோ அல்லது முகவரி திருத்தமோ தனித்தனியாகவோ தான் செய்ய இயலும் என்றும், ஒரே முறையில் அனைத்தும் செய்ய இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 2023–ன்படி பத்திரம் பதிவு செய்யப்பட்ட 3 மாதங்களுக்கு மேற்பட்ட அனைத்து சொத்துவரி பெயர் மாற்ற விண்ணப்பங்களுக்கும் ரூ.2000 காலதாமத கட்டணமாக விதிக்கப்படுகிறது. மனுதாரர் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதை வைத்து காலதாமத கட்டணத்தை இரத்து செய்யுமாறு கடிதம் அளித்துள்ளார். ஆனால் சென்னை மாநகராட்சியிலோ பத்திரப் பதிவை அடிப்படையாக வைத்துதான் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. பத்திரம் பதிவு செய்யப்பட்ட தேதி மற்றும் அனைத்தும் மனுதாரராலேயே பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளதால், அவரது சொத்து பதிவு செய்யப்பட்டு 3 மாதங்களுக்கு மேலாகி விட்டதினால் பெயர் மாற்றம் செய்யப்படும் போது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் 2023ன்படி விதி256 (3a)-ன்படி படிவம் 3ன் மூலம் சொத்துவரி பெயர் மாற்றத்திற்கு 3 மாதங்களுக்கு மேல் காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் சொத்துவரி பத்திரங்களுக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம், 2023–ன்படி விதி 259(2)–ல் ஆணையர் அவர்களால் தண்டத்தொகை ரூ.2000/– வசூலிக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே பெரு நகர சென்னை மாநகராட்சி ERP இணையதளத்தின் மூலமாகவே ரூ.2000/– காலதாமத கட்டணமாக விதிக்கப்பட்டுவிடும். எனவே, மண்டல அலுவலக வருவாய்த்துறையில் காலதாமத கட்டணத்தை நிர்ணயம் செய்ய இயலாது.

மேலும் மனுதாரர் அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 2023–ன்படி பெயர் மாற்ற காலதாமத கட்டணம் விதிக்கப்பட்டதன் காரணமாக பெயர் மாற்றத்திற்கு கையூட்டு கேட்டதாக ஆதாரமற்ற தவறான புகார் அளித்துள்ளார் என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''

7. மனுதாரரின் மனுக்கள், வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–ன் மண்டல அலுவலரின் அறிக்கைகள், முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

''மனுதாரர் 2018–ஆம் ஆண்டு தனது மனைவி C. இந்துமதி பெயரில் இருந்த சொத்தினை தனது பெயரான R. சிட்டிபாபு என்ற பெயரில் மாற்றம் செய்யப்பட்ட சொத்திற்கு தனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டதால், தனது மனைவியின் பெயரில் இருந்த சொத்து வரி மற்றும் குடிநீர் வரியினை தனது பெயருக்கு மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–க்கு மனுதாரரால் மனு கொடுக்கப்பட்டது என்பதும், மனுதாரர் பெயர் மட்டுமே மாற்றம் செய்யப்பட்டு, மற்ற விவரங்களான சர்வே எண் மற்றும் கதவு எண் மாற்றப்படவில்லை என்பதும், இது குறித்து கேட்ட போது மேற்படி அலுவலகத்தில் வரிவிதிப்பாளர் ரூ.2000/– கொடுத்தால், அதனை மாற்றி தருவதாக தெரிவிக்கப்பட்டது என்பதும், அதற்கு ரசீது வழங்கப்படுமா என கேட்டப்போது மேற்படி பணி முடிக்க வேண்டும் எனில் மேற்படி தொகை வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது என்பதும், மீண்டும் மனுக்கள் கொடுத்தும் மேற்கண்ட சர்வே எண், உட்பிரிவு எண் மற்றும் கதவு எண் ஆகியவை மாற்றம் செய்யப்படவில்லை என்பதும், ஆனால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 2023 விதி எண் 256–ன்படி ரூபாய் 2000/– அபராதம் விதிக்கப்பட்டதாக தனக்கு தெரிவிக்கப்பட்டது என்பதும். அந்த விதியின் நகல் ,தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரப்பட்டும் தகவல்கள் அளிக்கப்படவில்லை என்பதும், அபராத தொகையான ரூ.2000/– ரத்து செய்யுமாறும், தன்னை அலைக்கழித்த சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது

உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் சொத்துவரியில் பெயர் மாற்றம் செய்யக் கோரி அளிக்கப்பட்ட விண்ணப்பம் வருவாய் பிரிவில் 30.8.2024 அன்று பெறப்பட்டு 31.8.2024 அன்றே பெயர் மாற்றம் செய்யப்பட்டு விட்டது என்பதும், மனுதாரர் 26.8.2024 அளித்த கடிதத்தில் தன்னுடைய மனுவில் பழைய சொத்து உரிமையாளரின் பெயர் திருத்தம் தன்னுடைய விலாசத்திருத்தம் செய்யுமாறு கோரவில்லை என்பதும், இதுபற்றி மனுதாரருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ERP யில் பெயர்மாற்றமோ, பெயர் திருத்தமோ அல்லது முகவரி திருத்தமோ தனித்தனியாக தான் செய்ய இயலும் என்றும், ஒரே முறையில் அனைத்தும் செய்ய இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டது என்பதும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023–ன்படி பத்திரம் பதிவு செய்யப்பட்ட 3 மாதங்களுக்கு மேற்பட்ட அனைத்து சொத்துவரி பெயர் மாற்ற விண்ணப்பங்களுக்கும் ரூ.2000/– காலதாமத கட்டணமாக விதிக்கப்படுகிறது என்பதும், மனுதாரர் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதை வைத்து காலதாமத கட்டணத்தை இரத்து செய்யுமாறு கோரியதற்கு, பெருநகர சென்னை மாநகராட்சியில் பத்திரப் பதிவை அடிப்படையாக வைத்துதான் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது என்பதும், பத்திரம் பதிவு செய்யப்பட்ட தேதி மற்றும் அனைத்தும் மனுதாரராலேயே பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளதால், அவரது சொத்து பதிவு செய்யப்பட்டு 3 மாதங்களுக்கு மேலாகி விட்டதினால் பெயர் மாற்றம் செய்யப்படும் போது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி 256 (3a)-ன்படி படிவம் 3ன் மூலம் சொத்துவரி பெயர் மாற்றத்திற்கு 3 மாதங்களுக்கு மேல் காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் சொத்துவரி பத்திரங்களுக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி 259(2)–ல் ஆணையர் அவர்களால் தண்டத்தொகை ரூ.2000/– வசூலிக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால், பெருநகர சென்னை மாநகராட்சி ERP இணையதளத்தின் மூலமாகவே ரூ.2000/– காலதாமத கட்டணம் விதிக்கப்பட்டுவிடும் என்பதும், மண்டல அலுவலக வருவாய்த்துறையில் காலதாமத கட்டணத்தை நிர்ணயம் செய்ய இயலாது என்பதும், மனுதாரர் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023–ன்படி பெயர் மாற்ற காலதாமத கட்டணம் விதிக்கப்பட்டதன் காரணமாக பெயர் மாற்றத்திற்கு கையூட்டு கேட்டதாக ஆதாரமற்ற தவறான புகார் அளித்துள்ளார் என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரின் அறிக்கைகள் மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தனது மனைவி பெயரில் இருந்த சொத்தினை தனது பெயருக்கு மாற்றம் செய்து பதிவு பெற்ற பிறகு பட்டாவிலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் சொத்து வரி மற்றும் குடிநீர் வரிக்கும் தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு காலதாமத கட்டணமாக ரூ.2000/– விதிக்கப்பட்டதை ரத்து செய்யுமாறு கோரியுள்ளது குறித்து, மனுதாரர் சமர்ப்பித்த ஆதாரங்கள் அடிப்படையில், சொத்துவரி பெயர் மாற்றம் 3 மாதங்களுக்கு மேல் காலதாமதமாக, விண்ணக்கப்படும் நேர்வில், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, விதி 259(2)–ல் ஆணையரால் தண்டத்தொகை ரூ.2000/– வசூலிக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி ERP இணையதளத்தின் மூலம் ரூ.2000/– காலதாமத கட்டணமாக விதிக்கப்பட்டு உள்ளது என்பது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரருக்கு விதிக்கப்பட்ட சொத்து வரிக்கான தண்டத் தொகையான காலதாமத கட்டணமானது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள்,

2023, விதி 259(2)–ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியால் விதிக்கப்பட்டுள்ளது என்று அறிய முடிவதால், மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. சிட்டிபாபு,
கதவு எண் 4/186
காமராஜ் சாலை 8வது தெரு (அருகில்),
மஞ்சம்பாக்கம், மாதவரம்,
சென்னை–600 060.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 2 மணலி,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 1, காமராஜர் சாலை,
சென்னை 600 068.

(4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ./உதிரிகள்.

ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.